தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1978 மார்ச், 18

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்— விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா 4— மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகிறது.

வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்.

(குறுகியகால வினா 5.) திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பஞ்சாயத்து ஒன்றியங்களில் எத்தனை பஞ்சாயத்துக்கள் பிரிப்பதற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்றங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்று எந்த எந்தப் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளன ?

(ஆ) தேர்தலுக்குள் இப்பணிகள் அனைத்தும் முடிவு பெறுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) மற்றும் (ஆ) வடாற்காடு மாவட்டத்தில் 33 ஊராட்சிகளும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 19 ஊராட்சிகளையும் பிரித்து ஆணை பிறப்பிக்கப்பெற்றுள்ளது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஊராட்சிகள் அனைத்தும் அடுத்து வரும் ஊராட்சித் தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இப்பொருள் பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பிரிக்கப்பட வேண்டியவை யாவும் பிரிக்கப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ப்ரபோசல் வரவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த ப்ரபோசல் வரப்பெற்றிருக்கிறது. சில

திருத்தங்கள் தேவைப்படும் என்று சுட்டிக்காட்டி அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது அரசாங்கத்திலே. அப்படி அப்பீல் தாக்கல் செய்யப்பட்டவைகளில் சிறு திருத்தம் செய்ய அரசாங்கம் ஏற்ற பரிகாரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே ஒரு நாள் குறிப்பிடுவதே, அதற்குள் அதையெல்லாம் முடித்து விடவேண்டுமென்பதற்காகத்தான். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது பற்றி, உரிய வகையிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தேர்தல் நெருங்க நெருங்க பல பஞ்சாயத்துக்கள் இரண்டாகப் பிரிக்கக்கூடிய அளவுக்கு தீர்மானங்கள் போட்டு அனுப்ப கூடும். சென்ற வாரத்திலேகூட சில பஞ்சாயத்துக்கள் போட்டு அனுப்பி இருக்கின்றன. எனவே ஏப்ரல் இறுதிக்குள் வரக்கூடிய தீர்மானங்களை எல்லாம் பரிசீலனை செய்து, இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இவ்வாறு பிரிப்பதற்கு போதிய காலம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தக் காலத்தை நீட்டித்துக் கொடுப்பது அவசியமற்றது என்று அரசு கருதுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, பிப்ரவரி 28-ம் தேதி கடைசி நாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குபின் வந்த மனுக்களை எல்லாம் மறுபரிசீலனை செய்து பிரிப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்குள் வந்த மனுக்கள் எல்லாம் இறுதி முடிவெடுத்து அனுப்பப்பட்டு விட்டன. இனிமேலும் காலத்தை நீட்டி அவகாசம் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

உல்லாசப் பயணிகளுக்கு ஓய்வு விடுதிகள்.

*வினு—. 605 திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உல்லாசப் பயணிகள் தங்குவதற்கும், உணவு அருந்தவும் வசதிகள் கொண்ட ஓய்வு விடுதிகளை தமிழ்நாட்டில் முக்கிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?